செ.வெ.எண்: 30/அக்டோபர் நாள் : 23.10.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

# அரசு பொருட்களை கையாடல் செய்த சத்துணவு அமைப்பாளர்

# தற்காலிக பணிநீக்கம்

# மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நடவடிக்கை.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், சாயல்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சத்துணவு அமைப்பாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.மீனாட்சி என்பவர் சத்துணவு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட துவரம் பருப்பு கடத்தியதற்காக இராமநாதபுரம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை குற்ற எண் : 127/20-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இதனடிப்படையில் அரசுப் பொருட்களை கையாடல் செய்ததற்காக கடலாடி ஊராட்சி ஒன்றியம் சாயல்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சத்துணவு அமைப்பாளர் திருமதி.மீனாட்சி என்பவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**